DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 219/2021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 4 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சிலம்பரசன் |
| Father's Name | : | திரு. பாலு |
| Village | : | ராயர்பாளையம் |
| Taluk | : | தலைவாசல் |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.09.2024.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 12.00

1) நான் தற்சமயம் மேற்கண்ட முகவரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பரமசிவம் எனது தாத்தா ஆவார். கடந்த 03.09.2021 அன்று இரவு 07.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபொழுது எனது நண்பர் வினோத் எனக்கு போன் செய்து, எனது தாத்தா இயற்கை உபாதை கழிக்க ஆத்தூர் - வீரகனூர் செல்லும்பொழுது Bajaj இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்.

2) நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்தேன். எனது தாத்தாவிற்கு கை, கால், மண்டை ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. ஒரு காரின் மூலமாக வீரகனூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பிறகு ஆத்தூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு முடியாது என்றதால் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு சிகிச்சை பலனின்றி எனது தாத்தா இறந்துவிட்டார்.

3) இந்த விபத்திற்கு இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மனோஜ்தான் காரணம். வண்டியின் பதிவு எண் தெரியாது. சேலம் அரசு மருத்துவமனையில் போலீசார் எனது தாத்தாவின் பிரோதத்தின் மீது பிரேத விசாரணை செய்து, என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் வீட்டில் இருந்தபொழுது எனது நண்பர் வினோத் எனக்கு போன் செய்து, எனது தாத்தா இயற்கை உபாதை கழிக்க ஆத்தூர் - வீரகனூர் செல்லும்பொழுது Bajaj இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2) நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், எனது தாத்தாவிற்கு கை, கால், மண்டை ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்ததாகவும் ஒரு காரின் மூலமாக வீரகனூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாவும், பிறகு ஆத்தூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் அங்கு முடியாது என்றதால் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், அங்கு சிகிச்சை பலனின்றி எனது தாத்தா இறந்துவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 05.09.2021 அன்று விசாரித்தார்கள். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் போலீசார் அவ்வாறு என்னை விசாரிக்கவில்லை என்றாலும், அவ்வாறு விசாரித்ததாக தற்பொழுது முதல் முறையாக நீதிமன்றத்தில்தான் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) இந்த விபத்துக்கு காரணம் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர்தான் என்று எனக்கு யார் சொன்னார்கள் என்றால் அக்கம், பக்கம் இருந்தவர்கள் சொன்னார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரிதான் என்பதை யார் சொன்னார்கள் என்று என்னால் பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான்.

5) நான் சொல்வதுபோல் விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரி என்று யாரும் சொல்லவில்லை என்றாலும், நான் தான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. மோகன், செல்வி, கண்ணுசாமி, பிரகாஷ், ஆகிய அனைவரும் எனது உறவினர்கள் என்றால் எனது தூரத்து சொந்தக்காரர்கள் நெருங்கிய உறவினர்கள் அல்ல. விபத்தில் இறந்த பரமசிவம் எனக்கு தாத்தா முறை ஆவார். மேற்சொன்ன நபர்களின் செல்வியை தவிர நான் உட்பட அனைவரும் டிரைவர்கள் என்றால் சரிதான்.

6) நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், விபத்தில் இறந்தவருக்கு சொந்தக்கார் என்பதாலும், நாங்கள் அனைவரும் டிரைவர்கள் என்பதால் விபத்து இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.13

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.